# SUBORDINATE COURT, PADMANABHAPURAM
# CASE NO.SC. 258/2017
# Deposition of P.W.8

Name : திரு. மணிகண்டன்
S/o, D/o, W/o :
Caste :
Religion :
Village :
Taluk :
Calling :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of
**Dated:20.04.2022**

**முதல் விசாரணை-**

நான் பத்மனாபபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். நான் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு ஆம்புலன்ஸ் ஓட்டுநராக இருந்தேன். ஆஜர் 1ம் எதிரி ஆல்பர்ட் என்பவரை எனக்கு தெரியாது. அவரை என் முன்புக்கு காவல் துறையினர் கைது செய்யவோ என் முன்புக்கு 1ம் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவோ என் முன்புக்கு 1ம் எதிரியிடம் இருந்து வெட்டுக்கத்தி, இருசக்கர வாகனம் , தங்க செயின் ஆகியவற்றை போலீசார் கைப்பற்றவோ இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாம் கையொப்பம் என்னுடையது அது அ.சா.ஆ.2. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2ம் கையொப்பம் என்னுடையது அது அ.சா.ஆ.3 . என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.4. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதிக்க கோரி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை-**

24.8.2012ம் தேதி இந்த வழக்கின் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு போலீசார் ஒரு பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும், அ தன் பிறகு மறுநாள் 25.8.2012ம் தேதி நானும் , எனது நண்பர் ஜஸ்டின் ராஜ் என்பவரும் சாமியார் மடம் அருகில் உள்ள கஞ்சிமடம் ஜயப்பன் கோவில் பக்கம் நின்று கொண்டிருக்கும் போது ஆஜர் எதிரியை கைது செய்ததாகவும், அப்போது அவர் தானாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும்,

சாட்சி ஜஸ்டின் ராஜீம் கையொப்பம் இட்டோம் என்றும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கிற்கு பயன்படுத்திய வெட்டுக்கத்தியையும், களவு செய்த தங்க செயினையும் மேற்படி எதிரி வந்த இருசக்கர வாகனத்தையும் ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்தார்கள் என்றும், மேற்படி அத்தாட்சியில் நானும், சாட்சி ஜஸ்டின் ராஜீம் சாட்சியாக கையெழுத்து போட்டுவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக இவ்வழக்கிற்கு உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.